Journal of Management and Economics (JME)
Faculty of Management and Commerce |South Eastern University of Sri Lanka
ISSN 2950-7227 | Vol: 2 | Issue: I | July 2024

# இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்தன்மையில் ஏற்படுத்திய தாக்கம் - நிந்தவூர் பிரதேச செயலக பிரிவு குறித்த ஓர் ஆய்வு

**Shariff Mohamed Haroon & Mr. S. Balendran**

Department of Commerce, Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka

## ஆய்வுச்சுருக்கம்

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியானது நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் (SME) நிலைத்தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பொருளாதார நெருக்கடிக்காக, இந்தப் பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்ந்து அதற்கான தீர்வினை வழங்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மீதான பொருளாதார நெருக்கடியின் பின்விளைவுகளை பகுப்பாய்வு செய்வதும், அவற்றின் நிலைத்திருத்தல் மற்றும் வளர்ச்சியை பாதிக்கும் காரணிகள் பற்றியும் அதன் தாக்கம் பற்றியும் விரிவான விளக்கத்தைப் பெறுவதுமே ஆய்வின் முதன்மை நோக்கமாகும். இந்த ஆய்வு பணவீக்கம், அரசாங்கத்தின் ஆதரவு, கடன் பெறுதல், உள்;ர் சந்தைக்கேள்வி, போட்டிநிலைமை போன்ற சாரா மாறிகளையும் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்திருத்தல் என்ற சார் மாறியினையும் உள்ளடக்கியுள்ளது. இவ் ஆய்வில், நிந்தவூர் பிரதேசசெயலக பிரிவில் உள்ள அனைத்து சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இம் மாதிரியானது, நிந்தவூர் பிரதேச செயலகப் பகுதியில் 100 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களிடமிருந்து கட்டமைக்கப்பட்ட இயங்கலை (online) வினாக்கொத்துக்கள் மூலம் முதன்மைத்தரவு சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலகம், பிரதேசசபை மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவை பகுப்பாய்வு செய்ய விளக்க புள்ளிவிவரங்கள், தொடர்பு பகுப்பாய்வு (Correlation Analysis) மற்றும் நேர்கோட்டு பிற்செலவு பகுப்பாய்வு (Regression Analysis) முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருதுகோள் பரீட்சிப்பின் மூலம், ஐந்து சாரா மாறிகளில், உள்;ர் சந்தை கேள்வி, பீட்டா பெறுமதி மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் நிலைத்திருத்தலில் மிகவும் செல்வாக்கு செலுத்தும் காரணியாகக் கருதப்படுகிறது. அதைத் தொடர்ந்து அரசாங்கத்தின் ஆதரவு, பணவீக்கம், கடன் பெறுதல், மற்றும் போட்டி நிலைமை முறையே இங்கு தாக்கம் செலுத்துகிறது. ஆனால், உள்;ர் சந்தைக் கேள்வியானது நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் மிகவும் செல்வாக்கு செலுத்தும் காரணியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவும் தாக்கங்களும் பகுப்பாய்வின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது.

**முதன்மைச் சொற்கள் :** பொருளாதார நெருக்கடி, சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், நிந்தவூர், இலங்கை

## அறிமுகம்

"பொருளாதார நெருக்கடி" என்பது சில நிதி நிறுவனங்கள் அல்லது சொத்துக்கள் அவற்றின் மதிப்பில் கணிசமான அளவு இழக்கும் பரந்த அளவிலான இழப்பீட்டினை குறிக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வங்கிகளில் ஏற்பட்ட நிதிசார் பிரச்சினைகள் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்ததுடன், மேலும் பல பொருளாதார வீழ்ச்சிகள் ஒரே நேரத்தில் நிகழ்ந்துள்ளமை, பங்குச் சந்தைச் வீழ்ச்சிகள் மற்றும் பிற நிதிப்பற்றாக்குறைகள், நாணய நெருக்கடிகள் மற்றும் இறையாண்மைக் கடனைத் திருப்பிச் செலுத்தாமை போன்றவை பொதுவாக "நிதி நெருக்கடிகள்" (Castells, 2014) என்று குறிப்பிடப்படுகின்றது. பல பொருளாதார வல்லுனர்கள் பல்வேறு கருதுகோள்களைக் கொண்டு வந்துள்ளனர். நிதி நெருக்கடிகளானது உலகெங்கிலும் ஒருமித்த கருத்து இல்லாத போதிலும் மீண்டும் மீண்டும் நிகழும் நிகழ்வாகும் (Acharia & Richartsan, 2009).

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் (SME) தொழில் முயற்சியாளர்கள் தங்கியிருப்பதுடன் மற்றும் அதன் விரிவாக்கத்தில் நீண்ட காலமாக ஆர்வமாக உள்ளனர். வணிகங்களின் விரிவாக்கம் குறித்த சமீபத்திய ஆய்வுகள், பல நிலைகளின் பகுப்பாய்வு போதுமான அளவு இணைக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளன. மேலும், பெரும்பாலான ஆய்வுகள் தொழில்மயமான நாடுகளில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் காரணிகளில் கவனம் செலுத்தியுள்ளன. வளர்ந்து வரும் பிராந்தியங்களில், குறிப்பாக தெற்காசியாவில் (Ryazantsev, 2015) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் எழுச்சியைத் தூண்டும் காரணிகளை நிவர்த்தி செய்வதற்கான ஆதாரங்கள் இன்னும் கண்டறியப்படாமல் உள்ளது.

ஆய்வின் சிக்கலை வரையறுக்க மற்றும் அடையாளம் கண்டறிய, நிபுணர்களின் அறிக்கைகள், அவதானிப்புகள் மற்றும் தற்போதைய நிகழ்வுகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் ஆலோசகர்/பயிற்சியாளர் Bamunusinhe (2022) வெளியிட்ட அறிக்கையின்படி, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு விகிதம் ஆகியவற்றில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் போதிய வளர்ச்சியின்மை குறித்து அன்மைய அவதானிப்புகள் குறித்தும், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மூலம் நாட்டின் GDP இன் பங்களிப்பை அதிகரிக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. அவர்கள் இலங்கையில் உள்ள அனைத்து நிறுவனங்களிலும் 90மூ பங்களிப்பதோடு, அங்குள்ள அனைத்து வேலைகளிலும் 45மூ வேலைவாய்ப்புகளை வழங்குகிறார்கள். நாட்டின் வளர்ச்சியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வகிக்கும் முக்கிய பங்கை நிரூபிக்கிறது. தரவுகளின்படி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தற்போது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52மூ பங்களிப்பை வழங்குகின்றன, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) ஏற்றுமதியில் 5மூ பங்களிப்பு காணப்படுகின்றது. இது வெற்றிகரமான

பொருளாதாரங்களில் 90மூ ற்கும் அதிகமாக உள்ளது. Bamunusinhe (2022) மேலும் கூறுகையில், அறிஞர்களின் கூற்றுப்படி,

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 75மூ சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையிலிருந்தான பங்களிப்பு கிடைக்கப்பெறாத பட்சத்தில் நாட்டின் பொருளாதார ரீதியான வளர்ச்சி சாத்தியமானதாக இருக்காது. மேலும், இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் குறிப்பிட்ட நிறுவனத்தை விரிவுபடுத்த முடியாமலுள்ளது, ஏனெனில் இந்த முயற்சி தொடங்கப்பட்டு மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் வீழ்ச்சியடையும். இந்த நிலை தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்திருக்கும் தன்மையை கடுமையாக பாதிக்கும். எனவே, இலங்கையில் வணிகம் தொடர்பான கேள்விகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதில் ஆர்வமான பங்காளர்களாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஈடுபடுத்தும் ஒரு தளத்தை உருவாக்க வேண்டும்.

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியின் செயற்திறன் பெரும்பாலும் பாதகமாக உள்ளது. இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் குறைவான செயற்திறனுக்கு பங்களிக்கும் காரணிகளை ஆய்வாளர்கள் பல கோணங்களில் அவதானித்துள்ளனர். Levy (1993), இலக்கணத் தொகுப்பைக் கருத்தில் கொண்டு, நிதி, ஒழுங்குமுறை மற்றும் செலவு தொடர்பான மூன்று வகைகளாகப் பிரிக்கக்கூடிய பல கட்டுப்பாடுகளை ஆய்வு செய்துள்ளார். Wickramasinghe (2011) மேற்கொண்ட ஒரு ஆய்வு, தொழில் மற்றும் கொள்கை மட்டங்களில் இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வளர்ச்சியை பாதிக்கும் சில முக்கிய தடைகளை அடையாளம் கண்டுள்ளது. சாதகமற்ற பொருளாதாரக் கொள்கைகள், போதிய சந்தை கேள்வி, கடனை பெறுவதில் சிரமங்கள், மூலப்பொருட்கள் வழங்குவதிலுள்ள சிக்கல்கள், கடுமையான மற்றும் சாதகமற்ற விதிமுறைகள், உட்கட்டமைப்பு மற்றும் வளங்களின் பற்றாக்குறை, வணிக மேம்பாட்டு சேவைகளின் பற்றாக்குறை மற்றும் தகவல் தொடர்பாடல் குறைபாடு ஆகியவை இந்த கட்டுப்பாடுகளில் உள்ளடங்கும்

நாட்டில், கொவிற் தொற்றின் மூலம் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு மற்றும் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியினால் அன்னியச்செலாவணிப் பற்றாக்குறை, பண அச்சிடல் நடவடிக்கைகள் அதிகரித்ததன் காரணமாக நாட்டின் பணவீக்கம் சடுதியாக அதிகரித்துடன், வறுமையும் அதிகரித்துள்ளது, எரிபொருட்கள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக அன்றாட பாவனைப் பொருட்களின் விலை எதிர்பார்க்காத அளவுக்கு அதிகரித்து இருப்பதுடன், பல தொழில் முயற்சிகள் தோல்வியிலும் மற்றும் கைவிடப்பட்ட நிலமையிலும் இருப்பதனைக் கண்டு கொள்ளலாம்.

அந்த வகையில், எமது நாட்டில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட தொகையினர் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியில் ஈடுபடுகின்றனர். எனது ஆய்வுப் பிரதேசமான நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் சுமார் 500 ற்கும் மேற்பட்டவர்கள் காணப்படுகின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிகள்

காரணமாக இப்பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வளர்ச்சியடைந்துவரும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருக்கின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியானது பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50%ற்கு மேற்பட்ட பங்களிப்பினை வழங்குகின்றது. இதன் மூலம் நாட்டின் தொழிலற்றோர் படையில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதினை குறைக்க முடிவதுடன் தொழில்வாய்ப்பு அதிகரிக்கும் நிலைமை உருவாகவும் வழிவகுக்கின்றது. இதனால் எமது நாட்டின் கிராமப்பகுதிகளில் 80% ற்கு மேல் காணப்படுகின்ற வறுமையானது ஓரளவேனும் குறைவதுடன், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைகிறது. எனவே, இந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியின் மூலம் தனி மனித வாழ்விலும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலும் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சொத்துக்களின் பெறுமதி, தொழிலாளர்களின் எண்ணிக்கை, மூலதனத்தின் அளவு, வருமானம், உற்பத்தி என்பவற்றின் அடிப்படையில் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் என வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தவகையில், இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது 10 பேருக்குட்பட்ட தொழிலாளர்களை கொண்ட தொழில் முயற்சி சிறுதொழில் எனவும், 10-90 பேருக்குட்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் முயற்சி நடுத்தர தொழில் முயற்சி எனவும் வகைப்படுதியுள்ளது. (Satharasinge 2015) சிறு கைத்தொழில் திணைக்களமானது 5 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும் 50 தொழிலாளர்களையும் கொண்டவை சிறு கைத்தொழில் எனவும், 5-25 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும் 50-100 தொழிலாளர்களையும் கொண்டவை நடுத்தரளவான தொழில் முயற்சிகள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (Dasanayake 2010).

இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நெருக்கடி காரணமாக நிந்தவூர் பிரதேசத்தில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்தன்மையில் எவ்வாறான தாக்கத்தினைச் செலுத்தியுள்ளன? என்பதை ஆராயும் வகையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது. நிந்தவூர் பிரதேச செயலகப் பகுதியிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்தன்மையில் இலங்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்து ஆராய்வதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும். இந்த முதன்மை நோக்கம் கீழ்க்கண்டவாறு துணை நோக்கங்களாகப் பிரிக்கப்பட்டது:

1. நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்திருத்தலில் பணவீக்கத்தின் தாக்கத்தை ஆய்வு செய்வதற்கு.
2. நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், அதன் நிலைத்திருத்தலில் அரசாங்கத்தின் ஆதரவின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு.
3. நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்இ அதன் நிலைத்திருத்தலில் கடன் பெறுதலின் தாக்கத்தை ஆய்வு செயவதற்கு.

4. நிந்தவூரில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் நிலைத்திருத்தலில் சந்தைக்கேள்வி தாக்கத்தை மதிப்பிடு செய்வதற்கு.
5. நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்இ அதன் நிலைத்திருத்தலில் போட்டி நிலைமையின் தாக்கத்தை ஆய்வு செய்வதற்கு.
6. இத்தொழில் முயற்சியாளர்கள் இவ்வாறான நெருக்கடிகளின் பின்னர் அவர்களின் தொழில் முயற்சியில் ஏற்பட்டுள்ள பாதகமான சூழ்நிலைகளை அறிதல்.
7. இந்நெருக்கடிகளின் போதான சூழ்நிலைகளில் இத்தொழில் முயற்சிகளை எவ்வாறு கொண்டு நடாத்தி செல்வது மற்றும் அது தொடர்பான எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் என்பதனை கண்டறிதல்.

**முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு**

2007 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலும் 2008 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் உலக நிதி நெருக்கடியின் விளைவுகள் வெளிவரத் தொடங்கின. பல பெரிய நிதி நிறுவனங்கள் வீழ்ந்துள்ளது. மற்றும் உலகளவில் தோல்வி நிலைக்கு உள்ளாகியுள்ளது. மேலும் பணக்கார நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் கூட தங்கள் நிதி அமைப்புகளைப் பாதுகாக்க உதவிகளை மேற்கொள்ள கட்டாயத்திற்குட்படுத்தியுள்ளது (M. Castells, 2012).

நிதிச் சிக்கல்களுக்குப் பொறுப்பான நபர்கள் நெருக்கடியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள் என்று மக்கள் கவலைப்படும் அதே நேரத்தில் உலகளாவிய நிதி நெருக்கடி, மிகவும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் உள்ள அனைவரின் வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளது. (Kirman 2010) பிற நிதி நெருக்கடிகளின் காரணங்கள் மற்றும் பல பொருளாதார கோட்பாடுகளுக்கு உட்பட்டுள்ளது. இருப்பினும், சிறிய உடன்பாடு காணப்படுவதுடன், மேலும் நிதி நெருக்கடிகள் உலகில் தொடர்ந்து நிகழ்ந்துவருகின்றன (Stiglitz, 2009).

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. தரவுகளின்படி, தற்போதைய பொருளாதார நெருக்கடி மனித வரலாற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது, மேலும் இது 21 ஆம் நூற்றாண்டின் முதல்தசாப்தத்தில் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. நாடுகளின் பொருளாதாரங்கள் வங்கி அமைப்பைச் சார்ந்து இருப்பதால், அதன் தோல்வியானது வேலையின்மை, மற்றும் வணிகங்கள் மற்றும் தொழில்நிலைகள் மூடப்படுதல், அத்துடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி உட்பட பல சிக்கல்களை விளைவித்துள்ளது. உலகளாவிய வர்த்தகத்தில் (Uslaner 2010). 2008 இல், அமெரிக்க வீட்டுச் சந்தைத் துறை உலகப் பொருளாதார நெருக்கடியின் அறிகுறிகளைக் காட்டிய முதல் தொழிலாக காணப்பட்டது. இது இப்போது வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடையாத எல்லா நாடுகளையும் வியாபித்துள்ளது. நாட்டின் இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தேயிலை, இறப்பர், தேங்காய், மசாலாப் பொருட்கள், தைத்த ஆடைகள், நகைகள் உள்ளிட்ட பொருட்களை ஏற்றுமதி செய்கிறோம். எங்களிடமிருந்து இந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நாட்டில் காணப்படும் கேள்வி குறைவாக உள்ளது. இந்த

நெருக்கடி நிலை ஏற்படுவதால், தோட்டத்தொழில் அதன் விளைவுகளை உணர்வதுடன் அறிகுறிகளும் தென்படுகின்றன.(Kotz, 2009).

தங்கள் தயாரிப்புகளில் எந்த பாதிப்பும் இல்லாமல், பல வணிக நிறுவனங்கள் ஏற்கனவே ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டுப் பணத்தின் மற்றொரு முக்கியமாக, வெளிநாட்டில் வேலை செய்ய நாட்டை விட்டு வெளியேறியவர்களின் வருகை காணப்படுகின்றது. அவர்களினால் பல்வேறு நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், அவர்களது வேலைகளை இழக்கும் அபாயத்தில் மேலும் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையின் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடியதாக காணப்பட்டது (Ruwanpura & Wrigliy, 2011).

தற்போதைய உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசாங்கம் பொருத்தமான நிதி நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலம் நெருக்கடியின் தாக்கத்தை குறைக்கும் வகையில் பொருத்தமான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். சர்வதேச சந்தையில் ஒரு நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கான கேள்வி குறையும் போது, உடனடியாக வணிகத்தை மூடுவது நல்ல யோசனையல்ல என்பதுடன் இச் சூழ்நிலையில் பணியாளர்கள் குறைக்கப்பட வேண்டும் (Kadigamer, 2012). இருப்பினும், ஒரு முழுமையான பணிநிறுத்தம் ஒரு பொருத்தமில்லாததுடன். அதற்கு பதிலாக, நிறுவனங்கள் புதிய தந்திரோபாயங்களை உருவாக்குவதன் மூலம் செலவுகள் மற்றும் அன்றாட செயற்பாட்டு செலவுகளைக் குறைப்பதற்கான வழிகளை ஆராய வேண்டும். மாறாக, அவர்கள் தங்கள் சொந்த சமூகத்தில் விற்பனை செய்யக்கூடிய பொருட்களை தயாரிப்பதற்கு மாறலாம் (Gunatilka, 2015).

இந்தச் சூழலில், இணையத்தின் ஆற்றல் நிறுவனங்களை நிலைப்படுத்துவதில் மகத்தான உதவியாக உள்ள வெளியக வளங்கள் (Outsourcing) என்பது பணியிடத்தில் புதிய இயல்பான ஒன்றாகிவிட்டது. பணிகளைச் செய்வதற்கான இந்த முறை பல நன்மைகளைக் கொண்டுள்ளது. பெரிய பணியிடங்களை பராமரிப்பது மற்றும் வளங்களை வீணாக்குவது அவசியமில்லாததுடன் வீட்டிலிருந்து வேலை செய்பவர்களை வேலைக்கு அமர்த்துவதில் பல நன்மைகள் உள்ளன. வேலைநிறுத்தங்கள் காரணமாக வேலைத்தடை, மற்றும் Outsourcing நிகழ்வில் தேவையான நன்மைகளை வழங்க நிர்வாகம் கடமைப்பட்டிருக்காது (Sulthana, 2022). இந்த ஏற்பாட்டில் அனைத்து அலுவலகங்களும் சேவையாளர்களை பராமரிக்க வேண்டும். நாட்டிற்கு எது மிக முக்கியமானது என்பதை மீள்மதிப்பீடு செய்து அவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது.

நாம் நிதி நெருக்கடியினை தவிர்க்க வேண்டுமானால், எமது அந்நியச் செலாவணி அதிகரிக்கப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சியின் காரணமாக, சமகாலத்தில் தேசிய வாதத்திற்கு இடமில்லை என்று சிலர் குறிப்பிடுகின்றனர் (Sibly, 2013). இந்த கூற்று சவாலுக்கு

உட்படுத்தப்படவில்லை. சர்வாதிகார நாடுகள் நமது தேசிய அடையாளத்தை அடிபணியச் செய்து, நம்மை தேவையில்லாமல் சர்வதேச சமூகத்தைச் சார்ந்திருக்கச் செய்யக்கூடாது, அதுதான் இந்தக் கூற்று. அதாவது தன்னிறைவு அடைய எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். மேலும் அனைவரும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதி செய்வதில் தலைவர்கள் உண்மையிலேயே உறுதிபூண்டுள்ளனர் என்று அவர்கள் நம்பினால், முழு நாடும் சிறப்பாக இருக்கும். என்பதுதான் இதன் அர்த்தமாகும்.

இந்த நிதி நெருக்கடியானது, 1930 இல் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன் ஒப்பிடப்படுகின்றது, இதில் சந்தை நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக முடங்கியது, உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு கடுமையாக வீழ்ச்சியடைந்தது, மேலும் உலகப் பொருளாதாரங்கள் நெருக்கடிக்கு முந்தைய நிலைக்குத் திரும்புவதற்கு ஒரு தசாப்த காலம் தேவைப்பட்டது. மறுபுறம், தற்போதைய நெருக்கடி, முந்தைய நெருக்கடிகளிலிருந்து வேறுபட்டது, நிதி நிறுவனங்கள் முன்பை விட இப்போது மிகவும் பின்னிப்பிணைந்துள்ளன. அவர்கள் கடன் கொடுக்கும் பணத்திற்காக மற்ற நிறுவனங்களைச் சார்ந்திருப்பதன் காரணமாக, அமெரிக்காவில் குறைந்த தரம் வாய்ந்த அடமானக் கடன்களை வழங்கிய நிறுவனங்கள் விரைவாக கட்டுப்பாட்டை இழந்தன (Crotty, 2009).


மேலும், அந்த நிறுவனங்கள் மற்ற நிறுவனங்களை நம்பியிருந்ததன் விளைவாக, நெருக்கடியானது உலகளாவிய நோக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நிதி நிறுவனங்கள் தேசிய ஒழுங்குமுறைக்கு மட்டுமே உட்பட்டவை. மற்றொரு சாத்தியம் என்னவென்றால், இந்த நிறுவனங்கள் இப்போது உலகளவில் செயல்படுகின்றன, ஆனால் ஒழுங்குமுறைக்கான சர்வதேச கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை. உலகெங்கிலும் நெருக்கடிகள் பரவுவது பலவீனமான ஒழுங்குமுறை காரணமாக அல்ல, மாறாக ஒழுங்குமுறைக்கான உலகளாவிய கட்டமைப்பே இல்லை என்பதால். இந்த பகுதியில் உள்ள குறைபாடுகள் நிதி பயத்திற்கு வழிவகுக்கும், உலகளாவிய ஒழுங்குமுறைகளை உருவாக்க முடிவெடுப்பவர்களை கட்டாயப்படுத்தலாம் மற்றும் தேவையேற்பட்டால் தேசிய விதிமுறைகளை மாற்றியமைக்கும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்படல் வேண்டும். (Ajith Nivard 2008)

ஆய்வுப் பிரதேசமான நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரிவில் இந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நெருக்கடியானது நிலைத்தன்மையில் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துகின்றது என்பதுடன் இவற்றிற்கான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாகவும் போதுமான ஆய்வு மேற்கொள்ளப்படாமை, இவ்வாய்வின் இடைவெளியை உருவாக்குகின்றது.

## ஆய்வு முறையியல்

நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குள் செயற்படும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் (SME) நிலைத்தன்மையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய விரிவான விளக்கத்தை அடைவதற்கு இந்த ஆய்வு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.


ISSN 2950-7227 | Vol: 2 | Issue: I | July 2024




**வரைபடம் 01 : நிந்தவூர் பிரதேச தேசப்படம்**
மூலம் : நிந்தவூர் பிரதேச செயலகம்

பொருளாதார, நிதி மற்றும் சூழல் காரணிகளின் சிக்கலான விடயங்கள், ஆய்வுப் பிரதேசத்திலுள்ள உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் நேரடியாக முதன்மைத் தரவை முறையாகச் சேகரித்து, பகுப்பாய்வு செய்ய அனுமதிக்கும் நுட்பமாக வடிவமைக்கப்பட்ட ஆய்வு அணுகுமுறை ஒன்று அவசியப்படுகிறது.

## எண்ணக்கருவாக்கம் (Conceptualization)




**வுரைப்படம் : 02**
மூலம் : ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் நிலைத்திருத்தல்**: இது ஒரு சார் மாறியாக உள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போதும் அதற்குப் பின்னரும் செயற்பாட்டில் இருக்கும் நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் நிலைத்திருத்தலை இது பிரதிபலிக்கிறது. இந்த மாறி பொருளாதார சவால்களை தாங்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் பின்னடைவு மற்றும் திறனை பிரதிபலிக்கிறது.

### 3.2 சாரா மாறிகள்

- **பணவீக்கம்**: இந்த மாறியானது குறிப்பாக நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குள் பணவீக்கத்தினை அளவிடுகிறது. உயர் பணவீக்கம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் இலாபம், விலை நிர்ணய உத்திகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளை பாதிக்கும்..
- **அரசாங்கத்தின் ஆதரவு**: பொருளாதார நெருக்கடியின் போது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கக் கொள்கைகள் மற்றும் ஆதரவு நடவடிக்கைகளின் செயற்திறன் மற்றும் வகைகளை இந்த மாறி குறிப்பிடுகின்றது. மானியங்கள், வரிச் சலுகைகள் மற்றும் கடன் உதவி போன்ற மாறிகள் இதில் உள்ளடங்கும்.
- **கடன் பெறுதல்**: பொருளாதார நெருக்கடியின் போது உள்;ர் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற முயற்சிக்கும் போது நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் சிக்கல்களை இந்த மாறி பிரதிபலிக்கின்றது. கடன் விகிதங்கள், வட்டி விகிதங்கள் மற்றும் கடன் கிடைக்கும் தன்மை போன்ற மாறிகள் இதில் உள்ளடங்கும்.
- **உள்;ர் சந்தைக் கேள்வி**: நிந்தவூரில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வழங்கும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான உள்;ர் நுகர்வோர் கேள்வியில் ஏற்படும் மாற்றங்களை இந்த மாறி விளங்கப்படுத்துகிறது. நுகர்வோர் விருப்பத்தேர்வுகள், வாங்கும் திறன் மற்றும் சந்தைப் போக்குகள் போன்ற காரணிகளை இது தாக்கம் செலுத்துகிறது.
- **போட்டி நிலைமை:** சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் போட்டி என்பது இந்த சிறு வணிகங்களுக்கு இடையேயான போட்டியைக் குறிக்கிறது, ஏனெனில் அவை வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், அந்தந்த சந்தைகளில் வெற்றி பெறவும் பங்களிப்புச் செய்கின்றன. பெரிய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் குறைவான பணியாளர்கள் போன்ற குறைந்த வளங்களால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் சவால்களை எதிர்கொள்கின்றன. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வெற்றிகரமாக செயற்பட பெரும்பாலும் தங்களது உற்பத்திகள் அல்லது சேவைகளை வேறுபடுத்த வேண்டும், விலை நிர்ணைய தந்திரோபாயங்களை திறம்பட நிர்வகிக்க வேண்டும், புதியனபுனைதல் ஏற்படுத்த வேண்டும் மற்றும் வலுவான வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்க வேண்டும். சவால்கள் இருந்தபோதிலும், வெற்றிகரமான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பை வழங்குவதன் மூலமும், தங்கள் தொழில்களில் தனித்து நிற்க வழிகளைக் கண்டறிவதன் மூலமும் சிறப்பாக செயற்பட முடியும்.

## சேகரிப்பு மற்றும் மாதிரி எடுத்தல்

### *தரவு சேகரிப்பு*

நிந்தவூரிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் கவனம் செலுத்துவதற்கு முதன்மை தரவு சேகரிப்பு முக்கியமானதாக காணப்படுகின்றது. கணக்கெடுப்புகள், நேர்காணல்கள் அல்லது வேறு தரவு சேகரிப்பு முறைகள் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் இருந்து நேரடியாக தரவுகளைப் பெறுவதானது இதில் உள்ளடங்கும். ஆய்வு நோக்கங்களுடன் தொடர்புடைய கேள்விகளை உள்ளடக்கிய கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினை உள்ளடக்கியுள்ளது. இவ்வினாக்கொத்துக்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பண்புகள், நிதி செயற்திறன், கடன் பெறுதல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. நேர்முகத்தேர்வை நடாத்துதல், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்களுடனான நேர்காணல்கள் ஆனது முதன்மைத் தரவைச் சேகரிப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும். பயிற்சி பெற்ற கணக்கெடுப்பாளர்கள் அல்லது ஆய்வாளர்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்குச் சென்று ஆய்வுகளை நிர்வகிக்கவும், துல்லியமான பதில்களை உறுதி செய்யவும் முடியும். தரவு சேகரிப்பு செய்முறையானது நெறிமுறை வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை உறுதிசெய்யவும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பங்கேற்பாளர்களிடமிருந்து தகவல்களைப் பெறவும், இத்தரவுகளானது இரகசியத்தன்மைக்கு உட்படுவதுடன் நெறிமுறை ஆய்வு நடைமுறைகளை பின்பற்றவும் முடியும்.

இரண்டாம் நிலை தரவுகள் பின்வரும் வழிகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, பிரதேச செயலக தரவுகள் மற்றும் அறிக்கைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான தொடர்புடைய நிறுவனங்களின் விபரங்கள் மற்றும் பிரதேச சபை தரவுகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த வணிக முயற்சிகளுக்கும் அரசால் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இவைகள் பத்திரிகைகள், அறிக்கைகள் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### *மாதிரி எடுத்தல்*

நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் (SME) விரிவான பட்டியலைத் தயாரிக்க இந்த மாதிரி சட்டத்தை உருவாக்கி உள்;ர் வணிகச்சங்கங்கள், அரசாங்க பதிவுகள் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புக்களுடன் ஒத்துழைக்கவும், நிந்தவூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அமையப்பெற்றுள்ள இடங்களின் அடிப்படையில் இந்த மாதிரி எடுத்தலுக்கு அடுக்கு சீரற்ற மாதிரிகள் (ளுவசயவகைநைன சுயனெழஅ ளுயஅிடைபெ) பயன்படுத்தப்பட்டுள்ளது. பங்குபற்றலை உறுதிப்படுத்துவதற்காக இந்த பண்புகளின் அடிப்படையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை அடுக்குகளாக பிரிக்க முடியும். நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 25 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடங்கலாக 500 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களில்

வெவ்வேறு 5 துறைகளைச் சேர்ந்த 100 நபர்களிடமிருந்து தரவுகளைப் பெற Google Form ஊடாக SPSS மென்பொருள் மூலம் தரவுப்பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: மாதிரிகளின் தெரிவு**

| பிரிவுகள் / துறைகள் | மாதிரிகள் |
|---|---|
| அரிசி ஆலைகள் | 20 |
| உணவகங்கள் | 20 |
| மொத்த வியாபார நிலையங்கள் | 20 |
| தனியார் மற்றும் நடுத்தர நிறுவனங்கள் | 20 |
| சில்லறை வியாபார நிலையங்கள் மற்றும் ஏனையவை | 20 |
| **மொத்தம்** | **100** |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

**தரவு பகுப்பாய்வு**

நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SME) நிலைத்தன்மையில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்த இந்த ஆய்வில், தரவு பகுப்பாய்வானது மற்றும் அனுமானப்புள்ளிவிபர முறைகளின் கலவையை உள்ளடக்கியதாகும். முதலாவதாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பண்புகள், நிதி செயற்திறன், அரசாங்க உதவிகளின் பயன்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பான விடயங்களை சுருக்கமாகவும் முன்வைக்க கூடிய வகையில் விளக்கமான புள்ளிவிபரங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது ஆய்வின் மாறிகள் மற்றும் மாதிரிக்குள் அவற்றின் விநியோகம் பற்றிய தெளிவான விளக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டாவதாக, தரவுகளை ஆழமாக ஆராய அனுமான புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் பணவீக்கம் , அரசாங்கத்தின் ஆதரவு, கடன் பெறல் உள்;ர் சந்தைக் கேள்வி மற்றும் போட்டி நிலைமை போன்ற சாரா மாறிகள் அதேவேளை சார்பு மாறியான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் நிலைத்திருத்தலினை எவ்வாறு பாதித்திருக்கின்றது என்பதனை இப்பகுப்பாய்வின் மூலம் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அடிப்படை தரவு பகுப்பாய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், பொருளாதார நெருக்கடியின் போது நிந்தவூரில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய வெளிப்படுத்தல்களை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. Google படிவங்கள் மூலம் தரவு சேகரிக்கப்பட்டு ஒரேமாதிரியான பகுப்பாய்வு மற்றும் இரு வேறுபட்ட பகுப்பாய்வு (Univariate Analysis and Bivariate Analysis) , தொடர்பு பகுப்பாய்வுகளும் (Correlation Analysis) மற்றும் பிற்செலவு பகுப்பாய்வுகளும் (Regression Analysis) இந்த அத்தியாயத்தில் பகுப்பாய்வு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: ஒரேமாதிரியான பகுப்பாய்வின் தீர்மானங்கள் தொடர்பானது**

| **வீச்சு** | **தீர்மானங்களின் நிலை** |
|---|---|
| 1.0≤Xi≥2.5 | குறைந்த மட்டம் |
| 2.5<Xi≥3.5 | நடுத்தர மட்டம் |
| 3.5<Xi≥5.0 | உயர்ந்த மட்டம் |

*Xi= மாறியின் சராசரி பெறுமதி

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

**அட்டவணை 3: தொடர்பு பகுப்பாய்வின் தீர்மானங்கள் தொடர்பானது**

| **வீச்சு** | **தீர்மானங்கள்** |
|---|---|
| r = +1 | வலுவான நேர்மறையான தொடர்பு |
| r = 0.5 to 1.0 | நேர்மறையான தொடர்பு |
| r = 0.3 to 0.49 | நடுத்தர நேர்மறையான தொடர்பு |
| r = 0.1 to 0.29 | பலவீனமான நேர்மறையான தொடர்பு |
| r = - 0.1 to -0.29 | பலவீனமான எதிர்மறையான தொடர்பு |
| r = 0.3 to -0.49 | நடுத்தர எதிர்மறையான தொடர்பு |
| r = -0.5 to -0.1 | பலவீனமான எதிர்மறையான தொடர்பு |
| r = -1 | வலுவான எதிர்மறையான தொடர்பு |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

## தரவு பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடலும்

### *மாறிகளின் நம்பகத்தன்மையின் பகுப்பாய்வு*

அளவீட்டின் தரத்தை உறுதிப்படுத்த, இந்த வினாக்கொத்தின் கணக்கெடுப்பில் (Saunders et al., 2012) இணைக்கப்பட்ட கேள்விகளின் குழுவிலுள்ள பதில்களின் உள் நிலைத்தன்மையை ஆய்வு செய்வதற்காக நம்பகத்தன்மை சோதனை நடாத்தப்படுகிறது. இதற்காக Cronbach's alpha பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக, இதன் பெறுமதி 0.00 முதல் 1.00 இற்குள் இது இருக்க வேண்டும். Bryman and Bell (2011) Cronbach's Alpha ஒவ்வொரு மாறிகளிலிருந்தும் கேள்விகளை இணைக்கிறது, ஏனெனில் கேள்வி நீக்கப்படும்போது அதன் பெறுமதி அதிகரிக்கப்படும். இதனை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விளங்கப்படுத்தப்படுகிறது.

**அட்டவணை 4: க்ரோன்பேச்சின் அல்பா குணகங்கள் (Cronbach's Alpha Coefficients)**

| மாறிகள் | எண்ணிக்கை | Cronbach's Alpha |
|---|---|---|
| பணவீக்கம் | 5 | 0.913 |
| அரசின் ஆதரவு | 5 | 0.607 |
| கடன் பெறுதல் | 5 | 0.606 |
| உள்;ர் சந்தைக் கேள்வி | 5 | 0.825 |
| போட்டி நிலைமை | 5 | 0.888 |
| ளுஆநு நிலைத்திருத்தல் | 5 | 0.803 |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

Hair et al., (1998) இன் நம்பகத்தன்மை அல்லது Cronbach's alpha 0.6 ன் கருத்துப்படி இந்த பகுப்பாய்வில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு 0.6 ஆகவும், மேலும் 0.8 ஐ விட அதிகமாக அதன் பெறுமதி கிடைக்கும் போது அதன் தாக்கம் வலுவாக இருக்கும். இந்த முடிவுகளின் படி, அனைத்து மாறிகளும் வலுவான பெறுமதியினை கொண்டுள்ளமையினால், நம்பகத்தன்மையானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

***விளக்கப் பகுப்பாய்வு***

- **பால்**

**அட்டவணை 5: பாலினம் சம்மந்தமாக பதிலளிக்கப்பட்டவர்களின் விபரங்கள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| ஆண் | 89 | 89.0 | 89.0 | 89.0 |
| பெண் | 11 | 11.0 | 11.0 | 11.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, இந்த ஆய்வில் மொத்தம் 100 பேர் வினாக்கொத்துக்களுக்கு பதிலளித்துள்ளனர். ஆய்வுக்கு பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் 89.0% ஆனோர் ஆண்களாகவும் 11.0% ஆனோர் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.

- **வயது**

**அட்டவணை 6: பதிலளித்தவர்களின் வயது பிரிவினர்கள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 25 வயதுக்கு கீழ் | 2 | 2.0 | 2.0 | 2.0 |
| 25-34 வயது வரை | 10 | 10.0 | 10.0 | 12.0 |
| 35-44 வயது வரை | 32 | 32.0 | 32.0 | 44.0 |
| 45-54 வயது வரை | 31 | 31.0 | 31.0 | 75.0 |
| 54 வயதுக்கு மேல் | 25 | 25.0 | 25.0 | 100.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, ஐந்து வகையான வயது பிரிவினர்கள் காணப்படுகின்றனர். இங்கு பெரும்பாலானோர் 35-44 வயதுக்கிடைப்பட்ட பிரிவினர்களே அதாவது 32.0% ஆகக்காணப்படுகின்றனர். 25 வயதுக்குட்பட்ட வயது பிரிவில் 2.0% ஆனவர்கள் பதிலளித்துள்ளனர். அத்துடன் 25-34 வயதுக்கு இடைப்பட்டவர்கள 10.0% உம், 45-54 வயதிற்கிடைப்பட்டவர்கள் 31.0% ம் மற்றும் 54 வயதிற்கு மேற்பட்டவர்கள் 25.0% ம் பதிலளித்துள்ளார்கள்.

- **குடியியல் நிலை**

அட்டவணையின் படி, பதிலளித்தவர்களில் 4.0% ஆனவர்கள் திருமணமாகாதவர்களாகவும் 94.0% ஆனவர்கள் திருமணமானவர்களாகவும் மற்றும் 2.0% ஆனவர்கள் விவாகரத்து பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**அட்டவணை 7: குடியியல் நிலை தொடர்பாக பதிலளித்தவர்களின் விபரங்கள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| திருமணமாகாதவர் | 4 | 4.0 | 4.0 | 4.0 |
| திருமணமானவர் | 94 | 94.0 | 94.0 | 98.0 |
| விவாகரத்து பெற்றவர் | 2 | 2.0 | 2.0 | 100.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

- **கல்வித் தகைமை**

**அட்டவணை 8: பதிலளித்தவர்களின் கல்வித்தகைமைகள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| சாதாரண தரத்திற்கு கீழ் | 13 | 13.0 | 13.0 | 13.0 |
| சாதாரணதரம் | 16 | 16.0 | 16.0 | 29.0 |
| உயர்தரம் | 53 | 53.0 | 53.0 | 82.0 |
| டிப்ளோமா, சான்றிதழ் | 9 | 9.0 | 9.0 | 91.0 |
| பட்டம், அதற்கு மேல் | 9 | 9.0 | 9.0 | 100.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

இங்கு பதிலளிப்பவர்களின் கல்வித் தகைமை பற்றிய தரவுகள் மேலுள்ள அட்டவணையில் விளங்கப்படுத்தப்படுகின்றது. பதிலளித்தவர்களில் 13.0%ஆனோர் க.பொ.த சாதாரண தரத்திற்குக் கீழே தகைமை பெற்றவர்கள், பதிலளித்தவர்களில் 16.0% ஆனோர் க.பொ.த சாதாரண தரத் தகைமை பெற்றவர்கள், பதிலளித்தவர்களில் 53.0% ஆனார் க.பொ.த உயர்தரத் தகைமை பெற்றவர்கள், பதிலளித்தவர்களில் 9.0% ஆனோர் சான்றிதழ் அல்லது டிப்ளோமா முடித்தவர்கள் மற்றும் பட்டம் அல்லது அதற்குமேல் முடித்தவர்கள் 9.0% ஆனோர் தகுதி பெற்றவர்கள் ஆகும். விசேடமாக, வினாக்கொத்துக்கு பதிலளித்தவர்களில்

பெரும்பாலானோர் க.பொ.த உயர்தரத் தகைமை பெற்றவர்களாக காணப்படுகின்றனர்.

- **தொழில்**

**அட்டவணை 9: தொழில் அடிப்படையில் பதிலளித்தவர்களின் விபரங்கள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| உரிமையாளர் | 54 | 54.0 | 54.0 | 54.0 |
| தனி உரிமையாளர் | 20 | 20.0 | 20.0 | 74.0 |
| முகாமைத்துவ பணிப்பாளர் | 26 | 26.0 | 26.0 | 100.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, இங்கு பதிலளித்தவர்களில் 54.0%ஆனோர் உரிமையாளர்களாகவும், 20.0% ஆனோர் தனி உரிமையாளர்களாகவும் மற்றும் 26.0% ஆனோர் முகாமைத்துவ பணிப்பாளர்களாகவும் காணப்படுகின்றனர்.

- **வணிக வகை**

**அட்டவணை 10: வியாபார அடிப்படையில் பதிலளித்தவர்களின் விபரங்கள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| சில்லறை வியாபாரம் | 25 | 25.0 | 25.0 | 25.0 |
| மொத்த வியாபாரம் | 25 | 25.0 | 25.0 | 50.0 |
| உற்பத்தி | 25 | 25.0 | 25.0 | 75.0 |
| சேவை வழங்குனர் | 25 | 25.0 | 25.0 | 100.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, மொத்தமாக பதிலளித்த 100 பேரில் சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம், உற்பத்தி மற்றும் சேவை வழங்குனர் ஆகிய துறைகளில் சமமாக 25% பேர் பதிலளித்துள்ளனர்.

- **சுயதொழில் தொடங்குவதற்கான காரணம்**

கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியினை ஆரம்பிப்பதற்கு ஏதுவான காரணங்களை விளங்கப்படுத்துகின்றது. அந்தவகையில் 1.0% ஆனோர் வறுமையினாலும், 58.0% ஆனோர் சுயதொழிலில் ஈடுபடுவதற்காகவும், 27.0% ஆனோர் அதிக இலாபம் ஈட்டுவதற்காகவும், 11.0% ஆனோர் போதிய வருமானம் இன்மையினாலும் மற்றும் 3.0% ஆனோர் தமது பரம்பரை தொழில் காரணமாகவும் இத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்பதனை இது வெளிப்படுத்தியுள்ளது.

**அட்டவணை 11: பதிலளித்தவர்களின் சுயதொழில் தொடங்குவதற்கான காரணம் பற்றிய விபரங்கள்**

| விபரம் | எண்ணிக்கை | சதவிகிதம் | செல்லுபடியான சதவிகிதம் | மொத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| வறுமை | 1 | 1.0 | 1.0 | 1.0 |
| சுயதொழில் | 58 | 58.0 | 58.0 | 59.0 |
| அதிக இலாபம் பெற | 27 | 27.0 | 27.0 | 86.0 |
| வருமானம் போதாமை | 11 | 11.0 | 11.0 | 97.0 |
| பரம்பரை தொழில் | 3 | 3.0 | 3.0 | 100.0 |
| மொத்தம் | 100 | 100.0 | 100.0 | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

### *ஒரே மாதிரியான பகுப்பாய்வு (Univariate Analysis )*

இந்த ஆய்வில், சாராமாறிகள் மற்றும் சார்மாறிகளை கொண்டு நியமவிலகல் மற்றும் சராசரி என்பன கணிப்பிடப்படுவது இந்தாய்வாகும். மேலும் இந்த பகுப்பாய்விற்கு சாராமாறிகளின் பெறுமதிகள் மற்றும் முடிவுகள் என்பன விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. இக்கணிப்பீடு தொடர்பான அனைத்து மாறிகளும் தனித்தனியாக அதன் தொடர்புகளை பகுப்பாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **பணவீக்கம்**

**அட்டவனை 11: பணவீக்கம் தொடர்பான முழுமையான கணிப்பீடு தொடர்பான விபரங்கள்**

| குறிகாட்டிகள் | சராசரி | நியம விலகல் | முடிவு தொடர்பானது |
|---|---|---|---|
| உள்ர் பணவீக்கம் எனது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் (SME) நிதி ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதித்துள்ளது என்று நான் உறுதியாக நம்புகிறேன். | 4.62 | .749 | உயர் நிலை |
| பணவீக்கம் காரணமாக எங்களின் விலை நிர்ணைய உத்திகளை நான் கணிசமான அளவில் சரிசெய்ய வேண்டியிருந்தது. | 4.33 | .888 | உயர் நிலை |
| பணவீக்கத்தால் ஏற்படும் சவால்களை, அரசின் கொள்கைகள் வெற்றிகரமாக அமுல்படுத்தவில்லை. | 4.50 | .893 | உயர் நிலை |
| பணவீக்கம் காரணமாக எனது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் (SME) கணிசமான செலவு அதிகரிப்பை எதிர்நோக்கியுள்ளது. | 4.36 | .938 | உயர் நிலை |
| பணவீக்கம் எனது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் (SME) இலாபத்திற்கு பெரும் சவாலாக உள்ளது. | 4.52 | .797 | உயர் நிலை |
| பணவீக்கம் | 4.4660 | .73694 | உயர் நிலை |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

இந்த ஆய்வில் சாராமாறியாக இருக்கும் பணவீக்கத்தின் 05 குறிகாட்டிகளும் மதிப்பிடப்படுகின்றது. இங்கு ஒட்டுமொத்த பணவீக்கமானது சராசரி பெறுமதி 4.46 ஆகவும் நியம விலகல் 0.736 ஆகவும் காணப்படுகிறது. இது பணவீக்கத்தின் தாக்கத்தினை மதிப்பிடுவதில் உயர்ந்த மட்டத்தினை காட்டுகின்றது.

- **அரசின் ஆதரவு**

இந்த ஆய்வில் சாராமாறியாக இருக்கும் அரசாங்கத்தின் ஆதரவு தொடர்பாக 05 குறிகாட்டிகளும் மதிப்பிடப்படுகின்றது. இங்கு ஒட்டுமொத்த அரசாங்கத்தின் ஆதரவானது சராசரி பெறுமதி 3.27 ஆகவும் நியம விலகல் 0.62 ஆகவும் காணப்படுகிறது. இது அரசாங்கத்தின் ஆதரவு தொடர்பாக மதிப்பிடுவதில் நடுத்தர மட்டத்தினை காட்டுகின்றது.

**அட்டவணை 12: பதிலளித்தவர்களின் அரசின் ஆதரவு தொடர்பான கணிப்பீடு விபரங்கள்**

| குறிகாட்டிகள் | சராசரி | நியம விலகல் | முடிவு தொடர்பானது |
|---|---|---|---|
| பொருளாதார நெருக்கடியின் போது SME களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட அரசாங்க ஆதரவு திட்டங்களை நான் அறிவேன். | 3.31 | 1.178 | நடுத்தர நிலை |
| இந்த நெருக்கடியின் போது எனது SME க்கு உதவுவதில் அரசாங்க ஆதரவு நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருந்தன. | 1.91 | 1.240 | கீழ் நிலை |
| அரசாங்கத்தின் செயற்பாடுகள் எனது SME மேம்பாட்டிற்காக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. | 3.93 | .820 | உயர் நிலை |
| அரசாங்கத்தின் ஆதரவு கிடைப்பது எங்கள் நெருக்கடியை வழிநடாத்தும் ஒரு கருவியாக உள்ளது | 3.70 | .948 | உயர் நிலை |
| எங்கள் பிரதேசத்தில் உள்ள SME களுக்கு கூடுதல் வகையான அரசாங்கத்தின் ஆதரவு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். | 3.51 | 1.176 | உயர் நிலை |
| அரசின் ஆதரவு | 3.272 | 0.62894 | நடுத்தர நிலை |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

- **கடன் பெறுதல்**

இந்த ஆய்வில் சாராமாறியாக இருக்கும் கடன் பெறுதல் தொடர்பாக 05 குறிகாட்டிகளும் மதிப்பிடப்படுகின்றது. இங்கு ஒட்டுமொத்த கடன் பெறுதல் சராசரி பெறுமதி 3.10 ஆகவும் நியம விலகல் 0.51 ஆகவும் காணப்படுகிறது. இது கடன் பெறுதல் தொடர்பாக மதிப்பிடுவதில் நடுத்தர மட்டத்தினை காட்டுகின்றது.

**அட்டவணை 13: பதிலளித்தவர்களின் கடன் பெறுவதற்கான கணிப்பீட்டு பெறுமதி விபரங்கள்**

| குறிகாட்டிகள் | சராசரி | நியம விலகல் | முடிவு தொடர்பானது |
|---|---|---|---|
| எனது SME க்கு உள்ளுர் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவது ஒப்பீட்டளவில் எளிதானது. | 1.89 | 1.118 | கீழ் நிலை |
| பொருளாதார நெருக்கடிக்கு உள்ளுர் கடன் பெறுதல் பங்களிப்பு செலுத்துகின்றுத | 3.78 | .883 | உயர் நிலை |
| நெருக்கடியின் போது உள்@ர் வங்கிகளின் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் சாதகமாகவே உள்ளன. | 2.07 | 1.265 | கீழ் நிலை |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | 3.82 | .914 | உயர் நிலை |
| கடன் கிடைப்பது எங்களின் முடிவெடுப்பதில் ஒரு முக்கியமான காரணியாக உள்ளது, இது எங்கள் வணிகத்தை சாதகமாக பாதிக்கிறது. | 3.94 | .708 | உயர் நிலை |
| கடன் பெறுதல் | 3.1000 | .51286 | நடுத்தர நிலை |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

- **உள்;ர் சந்தைக்கேள்வி**

**அட்டவணை 14: பதிலளித்தவர்களின் உள்;ர் சந்தை கேள்விக்கான கணீப்பீட்டு பெறுமதி விபரங்கள்**

| குறிகாட்டிகள் | சராசரி | நியம விலகல் | முடிவு தொடர்பானது |
|---|---|---|---|
| பொருளாதார நெருக்கடியின் போது எங்கள் தயாரிப்புகள் ∴ சேவைகளுக்கான உள்@ர் நுகர்வோர் கேள்வி அதிகரித்துள்ளது. | 3.50 | 1.176 | உயர் நிலை |
| மாறிவரும் உள்;ர் சந்தை கேள்விகளுக்கு ஏற்ப எங்களின் சலுகைகளை வெற்றிகரமாக மாற்றியமைத்துள்ளோம். | 3.84 | 1.012 | உயர் நிலை |
| நுகர்வோர் விருப்பங்களை மாற்றுவது போன்ற காரணிகள் எங்கள் வணிக உத்திகளை கணிசமாக பாதித்துள்ளன. | 4.26 | .661 | உயர் நிலை |
| உள்@ர் நுகர்வோர் விருப்பங்களில் நீண்ட கால மாற்றங்கள் நெருக்கடியின் விளைவாக ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். | 3.98 | .724 | உயர் நிலை |
| உள்@ர் சந்தை கேள்வியில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கம் எங்கள் SME க்கு மிகவும் சாதகமாக உள்ளது. | 3.53 | 1.251 | உயர் நிலை |
| உள்;ர் சந்தை கேள்வி | 3.822 | 0.76165 | உயர் நிலை |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

இந்த ஆய்வில் சாராமாறியாக இருக்கும் உள்;ர் சந்தைக்கேள்வி தொடர்பாக 05 குறிகாட்டிகளும் மதிப்பிடப்படுகின்றது. இங்கு ஒட்டுமொத்த உள்;ர் சந்தைக்கேள்வியினது சராசரி பெறுமதி 3.82 ஆகவும் நியம விலகல் 0.76 ஆகவும் காணப்படுகிறது. இது உள்;ர் சந்தைக்கேள்வி தொடர்பாக மதிப்பிடுவதில் உயர் மட்டத்தினை காட்டுகின்றது.

- **போட்டி நிலைமை**

**அட்டவணை 15: பதிலளித்தவர்களின் போட்டி நிலைமை தொடர்பான கணீப்பீட்டு பெறுமதி விபரங்கள்**

| குறிகாட்டிகள் | சராசரி | நியம விலகல் | முடிவு தொடர்பானது |
|---|---|---|---|
| பொருளாதார நெருக்கடியின் போது, அதிகரித்த போட்டி நிலைமை எனது SME இன் இலாபத்தை எதிர்மறையாக பாதித்துள்ளது. | 4.09 | .753 | உயர் நிலை |
| தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் வாழ்வதற்குப் புதுமையான தீர்வுகளைக் கண்டறிய போட்டி நிலைமையான எனது SME யை கட்டாயப்படுத்தியுள்ளது. | 4.20 | .853 | உயர் நிலை |
| எங்கள் தொழில்துறையில் SME களுக்கு இடையே உள்ள உயர்ந்த போட்டி நிலைமை, தேவையான நிதிகளை பாதுகாப்பது மிகவும் சவாலாக உள்ளது. | 4.16 | .849 | உயர் நிலை |
| பொருளாதார நெருக்கடியின் போது அதிகரித்த போட்டி நிலைமை, உற்பத்தியின் தரம் மற்றும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த எனது SME இல் தாக்கம் செலுத்தியுள்ளது. | 4.20 | .778 | உயர் நிலை |
| பொருளாதார வீழ்ச்சியின் போது செலவுகளைக் குறைப்பதற்கும் திறமையாவதற்கும் எங்களின் SME இன் முயற்சிகளில் போட்டி நிலைமை ஒரு உந்து சக்தியாக இருந்து வருகிறது. | 4.05 | .892 | உயர் நிலை |
| போட்டி நிலைமை | 4.1400 | .68726 | உயர் நிலை |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

இந்த ஆய்வில் சாராமாறியாக இருக்கும் போட்டி நிலைமை தொடர்பாக 05 குறிகாட்டிகளும் மதிப்பிடப்படுகின்றது. இங்கு ஒட்டுமொத்த போட்டி நிலைமையின் சராசரி பெறுமதி 4.14 ஆகவும் நியம விலகல் 0.687 ஆகவும் காணப்படுகிறது. இது போட்டி நிலைமை தொடர்பாக மதிப்பிடுவதில் உயர் மட்டத்தினை காட்டுகின்றது.

- **சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் நிலைத்திருத்தல்**

இந்த ஆய்வில் சார்மாறியாக இருக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (SME) நிலைத்திருத்தல் தொடர்பாக 05 குறிகாட்டிகளும் மதிப்பிடப்படுகின்றது. இங்கு ஒட்டுமொத்த SME நிலைத்திருத்தல் சராசரி பெறுமதி 3.458 ஆகவும் நியம விலகல் 0.870 ஆகவும் காணப்படுகிறது. இது SME நிலைத்திருத்தல் தொடர்பாக மதிப்பிடுவதில் உயர் மட்டத்தினை காட்டுகின்றது.

**அட்டவணை 16: பதிலளித்தவர்களின் ளுஆநு நிலைத்திருத்தல் தொடர்பான கணீப்பீட்டு பெறுமதி விபரங்கள்**

| குறிகாட்டிகள் | சராசரி | நியம விலகல் | முடிவு தொடர்பானது |
|---|---|---|---|
| தற்போதைய பொருளாதார நெருக்கடி எமது பிரதேச செயலகப் பிரிவில் உள்ள SME களின் நிலைத்திருத்தலில் மிகவும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | 2.45 | 1.533 | கீழ் நிலை |
| நிந்தவூர் பிரதேச செயலக பிரிவில் எதிர்வரும் இரண்டு வருடங்களில் எனது SME தொடர்ந்து வெற்றிகரமாக இயங்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். | 3.55 | 1.167 | உயர் நிலை |
| நெருக்கடியின் போது நாம் நிலைத்திருத்தல் திறனில் அரசாங்கத்தின் ஆதரவு நடவடிக்கைகள் மிகவும் செல்வாக்கு செலுத்துகின்றன. | 3.82 | .947 | உயர் நிலை |
| தற்போதைய பொருளாதார சூழலில் எனது SME இன் எதிர்கால நிலைத்தன்மையில் எனது நம்பிக்கையின் அளவு மிக அதிகமாக உள்ளது. | 3.65 | 1.077 | உயர் நிலை |
| நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் எங்கள் வணிக நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளோம், மேலும் இந்த மாற்றங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. | 3.82 | 1.009 | உயர் நிலை |
| SME நிலைத்திருத்தல் | 3.4580 | .87076 | உயர் நிலை |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

***இருவேறு பகுப்பாய்வு (டீiஎயசயைவந யுயெடலளளை)***

இந்த பகுப்பாய்வானது சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளகர்களிடமிருந்து, வினாகொத்துக்கள் மூலம் பெறப்பட்ட மாதிரிகளை அடிப்படையாக கொண்டு (Sample) இதற்கான தொடர்பினை பகுப்பாய்வு செய்வதாகும். இப்பகுப்பாய்வில் இரண்டு பிரதான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது தொடர்பு பகுப்பாய்வு மற்றும் பிற்செலவு பகுப்பாய்வு (Correlation Analysis and Regression Analysis) என்பனவாகும்

- **பியர்சனின் (Pearson's) தொடர்பு பகுப்பாய்வு**

இந்த ஆய்வின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகளுக்கு இடையே உள்ள தன்மை (நேரடி அல்லது தலைகீழ்) மற்றும் தொடர்பின் அளவை தீர்மானிக்க பியர்சனின் தொடர்பு பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவு அளவு மற்றும் மாறியின் மக்கள் தொகை தொடர்பாக இச்சோதனைகள் தொடர்புக் குணகம் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 17: பணவீக்கம், அரசாங்கத்தின் ஆதரவு, கடன் பெறுதல் , உள்;;ர் சந்தைக் கேள்வி, போட்டி நிலைமை மற்றும் ளுஆநு நிலைத்திருத்தல் ஆகியவற்றுக்கிடையிலான கணிப்பீடு**

| | | I | GS | AC | LMD | C | SME |
|---|---|---|---|---|---|---|---|
| **I** | Pearson Correlation | 1 | .059 | .054 | .267** | .716** | -.022 |
| | Sig. (2-tailed) | | .563 | .594 | .007 | .000 | .826 |
| | N | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| **GS** | Pearson Correlation | .059 | 1 | .348** | .714** | -.031 | .626** |
| | Sig. (2-tailed) | .563 | | .000 | .000 | .759 | .000 |
| | N | 100 | 100 | 100 | 100 | 100 | 100a |
| **AC** | Pearson Correlation | .054 | .348** | 1 | .334** | .077 | .350** |
| | Sig. (2-tailed) | .594 | .000 | | .001 | .448 | .000 |
| | N | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| **LMD** | Pearson Correlation | .267** | .714** | .334** | 1 | .239* | .693** |
| | Sig. (2-tailed) | .007 | .000 | .001 | | .017 | .000 |
| | N | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| **C** | Pearson Correlation | .716** | -.031 | .077 | .239* | 1 | -.029 |
| | Sig. (2-tailed) | .000 | .759 | .448 | .017 | | .773 |
| | N | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| **SME** | Pearson Correlation | -.022 | .626** | .350** | .693** | -.029 | 1 |
| | Sig. (2-tailed) | .826 | .000 | .000 | .000 | .773 | |
| | N | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

**. Correlation is significant at the 0.01 level (2-tailed).

*. Correlation is significant at the 0.05 level (2-tailed).

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

அட்டவணை 17 இன் படி, பணவீக்கம் மற்றும் SME நிலைத்திருத்தலானது பலவீனமான எதிர்மறையான தொடர்பினை வெளிப்படுத்துகிறது. இது r = -0.022 காணப்புடுகின்றது. மேலும் அந்த தொடர்பு புள்ளிவிவர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படவில்லை (p>0.01). அரசாங்கத்தின் ஆதரவு மற்றும் SME நிலைத்திருத்தல் ஒரு வலுவான நேர்மறையான தொடர்பினை வெளிப்படுத்துகின்றன. இது r = 0.626 ஆக காணப்படுகின்றது. மற்றும் அந்த தொடர்பு புள்ளிவிபர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது (p<0.01). கடன் மற்றும் SME நிலைத்திருத்தலுக்கான தன்மையினை ஒரு நடுத்தர நேர்மறை தொடர்பினை வெளிப்படுத்துகிறது. இது r = 0.350 ஆக காணப்படுவதுடன், மேலும் அந்த தொடர்பு புள்ளிவிபர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது (p<0.01). உள்;ர் சந்தைக்கேள்வி மற்றும் SME நிலைத்திருத்தல் ஒரு வலுவான நேர்மறை தொடர்பினை வெளிப்படுத்துகிறது. இது r = 0.693 ஆக காணப்படுவதுடன், மேலும் அந்த தொடர்பு புள்ளிவிபர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது (p<0.01). அதேவேளை போட்டி நிலைமை மற்றும் SME நிலைத்திருத்தல் பலவீனமான எதிர்மறை தொடர்பினை வெளிப்படுத்துகிறது. இது r = -0.029 ஆக காணப்படுவதுடன், மேலும் அந்த தொடர்பு புள்ளிவிபர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாமல் காணப்படுகின்றது (p<0.01).

- **தொடர்பு பகுப்பாய்வின் சோதனை கருதுகோள்கள்**

தொடர்பு பகுப்பாய்வின்படி, ஒவ்வொரு சாரமாறியின் P பெறுமதியையும் அல்பா பெறுமதியுடன் (0.01) ஒப்பிடுவதன் மூலம் தனிப்பட்ட மாறிகளின் முக்கியத்துவம் பரீட்சிக்கப்படுகிறது. கருதுகோள் பரீட்சிப்பின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 18: இணைவுக்கான ஆய்வின் கருதுகோள் பரீட்சிப்பின் முடிவுகள்**

| கருதுகோள்கள் | முடிவுகள் |
|---|---|
| $H_1$: SME நிலைத்திருத்தலுக்கும் பணவீக்கத்திற்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | நிராகரிக்கப்பட்டுள்ளது |
| $H_2$: SME நிலைத்திருத்தலுக்கும் அரசாங்கத்தின் ஆதரவிற்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_3$: SME நிலைத்திருத்தலுக்கும் கடன் பெறுதலுக்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_4$: SME நிலைத்திருத்தலுக்கும் உள்;ர் சந்தைக்கேள்விக்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_5$: SME நிலைத்திருத்தலுக்கும் போட்டி நிலைமைக்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | நிராகரிக்கப்பட்டுள்ளது |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

***பல் மடங்கு நேர்கோட்டு பிற்செலவு பகுப்பாய்வு (Multiple Regression Analysis)***

இந்த பகுப்பாய்வினை பரீட்சிப்பதன் மூலம் தான் இது உண்மையில் ஏற்றுக்கொள்வதா என்பதனை அறிந்து கொள்ள முடியும். இது உண்மைத்தன்மையானதா என்பதனை பகுப்பாய்வு செய்வதும், கருதுகோள் பரீட்சிப்பு முறையாகவும் காணப்படுகின்றது. இதற்கு கீழ் மூன்று அட்டவனைகள் இதன் தொடர்பினை விளக்குகிறது. சார் மாறியில் சாரா மாறிகளின் தாக்கத்தை அறிவதற்கு இப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**அட்டவணை 19: Multiple Regression ஆய்வு தொடர்பான சுருக்கம்**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .742[a] | .551 | .527 | .59907 |
| a. Predictors: (Constant), C, GS, AC, IR, LMD | | | | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

இந்த அட்டவனையின் படி மாறிகளுக்கிடையிலான தொடர்பினை சதவீதத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இங்கு SME நிலைத்திருத்தலில் 55.1மு விலகல் காணப்படுவதுடன் பணவீக்கம், அரசாங்கத்தின் ஆதரவு, கடன் பெறுதல், உள்;ர் சந்தைக்கேள்வி மற்றும் போட்டிநிலைமை ஆகியவற்றை ‘R Square’ மூலம் விளங்கப்படுத்தப்படுகின்றது. ‘Adjusted R Square’ 52.7மு ஆகவும் காணப்படுகின்றது.

**அட்டவணை 20: Multiple Regression ஆய்வு ANOVA தொடர்பானது**

| Model | | Sum of Squares | Df | Mean Square | F | Sig. |
|---|---|---|---|---|---|---|
| 1 | Regression | 41.328 | 5 | 8.266 | 23.031 | .000[b] |
| | Residual | 33.736 | 94 | .359 | | |
| | Total | 75.064 | 99 | | | |
| a. Dependent Variable: SME | | | | | | |
| b. Predictors: (Constant), C, GS, AC, IR, LMD | | | | | | |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

அட்டவணை 20 இன்படி, அடிப்படையில், Linear Regression ஆனது Significant ஆக காணப்படுகின்றது (F=23.031, df=5, 94) $p<0.05$. இது மாதிரி Significant என்பதைக் குறிக்கிறது. இங்கு Significant ஆனது 0.000 ஆக காணப்படுவதனால் இந்த Regression மாதிரியானது Significant ஆக காணப்படுவதனால் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**அட்டவணை 21: Multiple Regression ஆய்வின் Coefficients**

| Model | | Unstandardized Coefficients | | Standardized Coefficients | t | Sig. |
|---|---|---|---|---|---|---|
| | | B | Std. Error | Beta | | |
| 1 | (Constant) | .543 | .563 | | .965 | .337 |
| | IR | -.063 | .118 | -.053 | -.534 | .000 |
| | GS | .241 | .146 | .174 | 1.654 | .000 |
| | AC | .186 | .127 | .109 | 1.465 | .000 |
| | LMD | .661 | .123 | .578 | 5.380 | .000 |
| | C | -.167 | .129 | -.132 | -1.292 | .000 |

a. Dependent Variable: SME

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

இந்த coefficients பகுப்பாய்வில் அனைத்து சாராமாறிகளின் Significant ஆனது 0.000 ஆக காணப்படுகின்றது. ஆனால் significant ஆனது 0.05 ஐ விட குறைவாக இருப்பதனால் எல்லா கருதுகோள்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அட்டவனையில் B பெறுமதியினை ஒப்பிடும் போது சாராமாறியான உள்;ர் சந்தைக் கேள்வியானது 0.661 என்ற உயர்பெறுமதியினை காட்டுவதனால், இந்த மாறியானது SME நிலைத்திருத்தலில் பாரிய தாக்கத்தினை செலுத்துகின்றது என்பதனை குறிப்பிடலாம்.

பீட்டா குணகங்கள் எதிர்மறை அல்லது நேர்மறையாக இருக்கலாம். பீட்டா குணகம் நேர்மறையாக இருந்தால், சாரா மாறியின் ஒவ்வொரு அலகு அதிகரிப்புக்கும், சார் மாறி பீட்டா குணக பெறுமதி அதிகரிக்கும் என்பது இதன் விளக்கம் ஆகும். பீட்டா குணகம் எதிர்மறையாக இருந்தால், சாரா மாறியின் ஒவ்வொரு யூனிட் அதிகரிப்புக்கும், சார் மாறி பீட்டா குணக மதிப்பால் குறையும் என்பது இதன் விளக்கமாகும். அனைத்து சாரா மாறிகளின் பீட்டா குணகம் நேர்மறையாக இருப்பதால், நேர்மறையான தொடர்பு உள்ளது.

பீட்டா குணகம் தீர்மானிக்கப்பட்டதும், Multiple Regression சமன்பாட்டை எழுதலாம். மேலே உள்ள பீட்டா குணகத்தைப் பயன்படுத்தி, சமன்பாட்டை பின்வருமாறு எழுதலாம்:

$$Y = \alpha + \beta_1 X_1 + \beta_2 X_2 + \beta_3 X_3 + \beta_4 X_4 + \beta_5 X_5 + \varepsilon$$

$$SME = 0.543 + (-0.063)\,(I) + 0.241\,(GS) + 0.186(AC) + 0.661(LMD) + (-0.167)\,(C)$$

அட்டவணை 21 இன் அடிப்படையில், பணவீக்கம் அல்பா பெறுமதியானது $p = 0.000$ ஆகக் காணப்படுகின்றது. இது குறிப்பிடத்தக்க அளவு 0.05 ஐ விடக் குறைவாக இருப்பதுடன், அரசாங்கத்தின் ஆதரவு அல்பா பெறுமதி $p = 0.000$ ஆகக் காணப்படுகின்றது. இது குறிப்பிடத்தக்க அளவு 0.05 ஐ விடக் குறைவாக இருப்பதுடன், கடன் பெறுதலின் அல்பா பெறுமதி $p = 0.000$ ஆகக் காணப்படுகின்றது. இது குறிப்பிடத்தக்க அளவு 0.05 ஐ விட குறைவாக

இருப்பதுடன், உள்;ர் சந்தை க்கேள்வியின் அல்பா பெறுமதி p = 0.000 ஆகக் காணப்படுகின்றது. இது குறிப்பிடத்தக்க அளவு 0.05 ஐ விட குறைவாக இருப்பதுடன் மற்றும் போட்டி நிலைமையின் அல்பா பெறுமதி p = 0.000 ஆகக் காணப்படுகின்றது. இது குறிப்பிடத்தக்க அளவு 0.05 ஐ விட குறைவாக இருக்கின்றது. எனவே, அனைத்து சாரா மாறிகளும் SME நிலைத்திருத்தலில் புள்ளிவிவர ரீதியாக குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்று முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

Multiple Regression பகுப்பாய்வின்படி, ஒவ்வொரு சாரா மாறியின் P பெறுமதிமையும் அல்பா பெறுமதியுடன் (0.05) ஒப்பிடுவதன் மூலம் தனிப்பட்ட மாறிகளின் முக்கியத்துவம் பரீட்சிக்கப்படுகிறது. கருதுகோள் சோதனையின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 22: Multiple Regression ஆய்வு தொடர்பான கருதுகோள் பரீட்சிப்பின் சுருக்கம்**

| கருதுகோள்கள் | முடிவுகள் |
|---|---|
| $H_1$: SME நிலைத்திருத்தலுக்கும் பணவீக்கத்திற்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_2$: SME நிலைத்திருத்தலுக்கும் அரசாங்கத்தின் ஆதரவிற்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_3$: SME நிலைத்திருத்தலுக்கும் கடன் பெறுதலுக்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_4$: SME நிலைத்திருத்தலுக்கும் உள்;ர் சந்தைக்கேள்விக்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| $H_5$: SME நிலைத்திருத்தலுக்கும் போட்டி நிலைமைக்குமிடையிலான பொருண்மைமட்டம் (Significant Relationship) | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |

## முடிவுரை

ஆய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற முடிவுகளின் படி அண்மைய பொருளாதார நெருக்கடி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்தன்மையில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதை கண்டுகொள்ளலாம். இங்கு சாரா மாறிகளான பணவீக்கம், அரசின் ஆதரவு, கடன் பெறுதல், உள்;ர் சந்தைக் கேள்வி மற்றும் போட்டி நிலைமைகளானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் (SME) நிலைத்திருத்தல் தன்மையில் பாரியளவு தாக்கத்தை செலுத்தியுள்ளது.

குறிப்பாக, Univarite Analysis மற்றும் Bivariate Analysis மூலமுமான பகுப்பாய்வுகளின் ஒட்டுமொத்த முடிவுகளின் படி இந்த காரணிகள் இதில் நேரடி தாக்கத்தினை செலுத்துகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது. விசேடமாக உள்;ர் சந்தைக்கேள்வியானது அண்மைய பொருளாதார நெருக்கடியானது நிலைத்திருத்தலில் பாரிய தாக்கம் செலுத்தும் காரணியாக இருப்பதனை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், இந்த உள்;ர் சந்தைக் கேள்வியில் பின்வரும் விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நுகர்வோரின் விருப்பத்தேர்வுகள், வாங்கும் திறன் மற்றும் சந்தைப்போக்குகள் இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அண்மைய பொருளாதார நெருக்கடி காரணமாக வாங்கும் திறன் என்ற கொள்வனவு சக்தியானது தற்பொழுது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதும் விசேட அம்சமாகும்.

## ஆய்வின் வரையறைகள்

இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நெருக்கடி காரணமாக நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் நிலைத்தன்மையில் ஏற்பட்டுள்ள தாக்கம் என்ற எனது ஆய்வானது அபிவிருத்தி பொருளியலில் முதுமாணி பட்டத்தினை பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு காரணமாக ஆய்வாளன் ஆகிய நான், இவ்வாய்வினை மேற்கொள்ள பின்வரும் பல வரையறைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

1. இவ்வாய்வானது நிந்தவூர் பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் மட்டுப்படுத்தி மேற்கொள்வது.
2. இங்கு குறிப்பிட்ட 100 பேரை மாதிரியாக தெரிவு செய்து அவர்களிடமிருந்து மட்டும் தரவுகள் பெற்றுக் கொள்வது.
3. இவ்வாய்வு தொடர்பான விளக்கங்கள் மேற்கொள்ளும் போது தரவுகள் மற்றும் தகவல்கள் வரையறுக்கப்பட்டவையாகக் காணப்படுவது.
4. தரவு சேகரிப்பின் போது அதிகமானவர்கள் தரவுகள் மற்றும் தகவல்கள் வழங்க முன்வராமை காணப்பட்டது.
5. இவ்வாய்வானது குறுகிய காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளதால், இக்காலப்பகுதிக்குள் இவ்வாய்வினை பரந்த அளவில் மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.
6. இந்த ஆய்வானது பணவீக்கம், அரசாங்கத்தின் ஆதரவு, கடன் பெறுதல், உள்;ர் சந்தைக் கேள்வி மற்றும் போட்டி நிலைமை போன்ற ஐந்து சாராமாறிகளை மாத்திரம் இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதும் வரையறையாக காணப்படுகின்றது.

## பரிந்துரைகள்

### *எதிர்கால ஆய்விற்கான வழிகாட்டல் மற்றும் சிபாரிசுகள்*

இவ் ஆய்வானது எதிர்காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் அதனுடன் தொடர்புள்ள துறைகளுக்கான வழிகாட்டுதல் மற்றும் மேம்பாட்டுக்கான சிபாரிசுகளாக பயன்படுத்தலாம். இந்த ஆய்வில் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் மற்றும் குறிப்பிட்ட மாதிரி அளவினர்கள் மாத்திரம்

அடிப்படையாகக் கொண்டவைகளை மாற்றியமைக்கப்பட வேண்டும். மேலும், ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வினாக்கொத்துக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மற்றும் மாற்றியமைக்கவும் தகவல்கள் சேகரிப்பதற்காக நேர்காணல்களையும் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ள பரிந்துரைக்க முடியும். இது ஆய்வுக்கான நம்பகத் தன்மையை உருவாக்கும்.

இவ் ஆய்வானது, உயர் கல்வி நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். மேலும், பணவீக்கம், அரசாங்கத்தின் ஆதரவு, கடன் பெறுதல் உள்;ர் சந்தைக் கேள்வி மற்றும் போட்டி நிலைமை போன்ற மட்டுப்படுத்தப்பட்ட சாரா மாறிகள் மாத்திரமே ஆய்வுக்காக எடுக்கப்பட்டன. எனவே, எதிர்காலத்தில் ஏனைய பிரதேசசெயலக பிரிவினையும் உள்ளடக்கி ஆய்வினை மேற்கொள்ளுதல் சிறப்பாக அமையும்.

### *பரிந்துரைகள்*

இந்த ஆய்வின் நோக்கத்தினை அடையும் விதத்தில், குறித்த 5 சாரா மாறிகளும் சார் மாறியுடன் எந்தளவு தாக்கம் செலுத்துகின்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வில் பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1. **பணவீக்கத்தினைப் பொறுத்த வகையில்**, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் (SME) அதன் நிலைத்திருப்பதில் தாக்கம் செலுத்தியுள்ளது. ஏனெனில், இலங்கையின் அண்மைக்கால நிதி நெருக்கடியின் மூலம் பணவீக்கமானது சடுதியாக அதிகரித்து காணப்பட்டது. இது இச் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளைக் கொண்டு நடாத்துவதில் பாரிய சிக்கல்களை இந்த முயற்சியாளர்கள் எதிர்நோக்கி இருந்துள்ளனர். குறிப்பாக அவர்களது இலாபத்திற்கு பெரும் சவாலாக இருந்ததாகவும் மற்றும் மேலதிகமான செலவுகளை மேற்கொள்ள வேண்டியும் இருந்துள்ளது என்பதும் இந்த ஆய்வில் அவர்களது வினாக்கொத்துக்கள் மூலம் விளங்கப்படுத்தப்படுகின்றன. ஆகையினால், அரசாங்கமானது பணவீக்கத்தினை சிறந்த கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள சாத்தியமான வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

2. **அரசின் ஆதரவானது**, மிகவும் குறைந்த மட்டத்திலேயே இந்த தொழில் முயற்சியாளர்களுக்கு கிடைத்துள்ளதுடன், இந்த நெருக்கடியான காலகட்டத்தில் அரசின் ஆதரவினை அதிகளவான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், இதனை நிவர்த்தி செய்ய ஒரு கருவியாக விரும்பியுள்ளனர். ஏனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு அரசாங்கமானது அவர்களது தொழில் முயற்சிகள் மீதான ஆதரவினை மற்றும் உதவிகளை நிதி ரீதியாக மற்றும் சிறந்த வழிகாட்டல்களை அவ்வப்போது கட்டாயம் வழங்க வேண்டும்.

3. **கடன் பெறுதலினை நோக்கும் போது,** இதுவும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்திருத்தலில் தாக்கம் செலுத்தும் காரணியாகக் காணப்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் அவர்களது வியாபாரத்தினை ஆரம்பிக்கும் நோக்கிலும் அதனை விருத்தி செய்யும்

நோக்கிலும், கடன்கள் பெறப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அண்மைய பொருளாதார நெருக்கடி காரணமாக, பெற்றுக் கொண்ட கடன்களை செலுத்தி முடிப்பதில் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அரசாங்கமானது இதில் விஷேட கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. ஏனெனில், நாட்டின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பங்கு அளப்பரியது. மேலும், இச் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் கடன்களைப் பெறும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். குறிப்பாக, குடும்பம் , உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்கள் மூலம் பெறப்படும் கடன்களை முடியுமானவரை தவிர்க்க வேண்டும். அதேவேளை, கடன் மூலதனத்தினைக் குறைத்து உரிமையாளர் மூலதனம் இடல் முறையினை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. **உள்@ர் சந்தைக் கேள்வியானது**, உண்மையில் இந்த ஆய்வில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்திருத்தலில் பாரிய தாக்கம் செலுத்தும் காரணியாக காணப்படுகிறது. நுகர்வோரின் விருப்பத்தேர்வுகள், வாங்கும் திறன் மற்றும் சந்தைப்போக்குகள் என்பன இங்கு தாக்கம் செலுத்தியுள்ளன. குறிப்பாக வாங்கும் திறனானது, அண்மைக்கால பொருளாதார நெருக்கடியினால் வெகுவாக குறைந்து காணப்படுகிறது. ஏனெனில், பணத்திற்கான பெறுமதி (Value for money ) மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. இதனால் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது அதாவது கொள்வவு சக்தி குறைந்தளவு காணப்படுகிறது. எனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி அல்லது சேவைகளுக்கான வழங்கல்களை நுகர்வோர்களுக்கு திருப்தி தரத்தக்க வகையில் சிறந்த சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை மேற்கொள்ள வேண்டும்.

5. **போட்டி நிலமையினை நோக்கும் போது,** இதுவும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிலைத்திருத்தலில் தாக்கம் செலுத்துவதினை அவதானிக்கலாம். நுகர்வோர்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய விதத்தில் தங்களது பொருட்கள் மற்றும் சேவைகளை தங்குதடையின்றி வழங்க வேண்டும். மேலும், புதியனபுனைதல் (Innovation) மூலம் நவீன தொழிநுட்பங்களினை பயன்படுத்துவதன் மூலமும், வாடிக்கையாளர்கள் திருப்தி அளிக்கத்தக்க தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை நியாயமான விலையில் வழங்கி சிறந்த வாடிக்கையாளர் சேவையினையும் வழங்க இந்த சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் முன் வரவேண்டும்.

ஆகையினால், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் இவ்வாய்வுப்பிரதேசத்திலும் மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் நிலைத்திருத்தலில் அரசாங்கமானது ஆக்கபூர்வமான உதவிகளையும், சிறந்த வழிகாட்டல்கள் மற்றும் ஊக்கப்படுத்தல்களையும் மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தங்களது வியாபாரத்தினை விருத்தி செய்வதற்கும், புதியன புனைதல் மூலம் நுகர்வோர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க முன் வரவேண்டும்.

எனவே, வறிய மக்களின் பொருளாதார நிலையினை விருத்தி செய்வதற்காக சாத்தியமானதோர் சிறந்த தீர்வாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் முக்கியானதொன்றாகக் காணப்படுவதனால், இதனை அதிகளவில் ஆரம்பிப்பதன் மூலம் மக்கள் வருமானம் பெற்றுக் கொள்வதுடன் அவர்களது குடும்ப வருமானம் அதிகரித்து வாழ்க்கைத்தரத்திலும் அதிகரிப்பு ஏற்படும். குறிப்பாக வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு இந்த தொழில்கள் நல்லதொரு வரப்பிரசாதமாகும். இதன் மூலம் அவர்கள் தொழில் வாய்ப்பினை முறையாக தேடிக்கொள்வதுடன், வருமானத்தையும் அதிகரிக்கச் செய்து, இப்பிரதேசத்தின் விருத்திக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்காற்ற முடியும். ஏனெனில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மூலமான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும். இதனால், நாட்டின் அந்நியச் செலாவணியும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட இது பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்**

Bryman, A. and Bell, E. (2011) *Business Research Methods*. 3rd edn. Oxfor: Oxford University Press.

Hair, J. F., Money, A. H., Samouel, P., &Page, M., (2007). *Research Methods for Business*. Chichester: John Wiley and Sons.

Saunders, M., Lewis, P. and Thornhill, A. (2012) Research Methods for Business Students. *5$^{th}$ edn. UK: Pearson Education Ltd*.

Aberathne, S. (2005). ‘Small and Medium Enterprises in Sri Lanka: Integrating the SME sector with the Market’, Paper presented on the regional convention on policy reforms for SME development in SAARC Countries, Colombo.

Acharya, V. V. & Richardson, M., (2009). CAUSES OF THE FINANCIAL CRISIS. Critical Review; A Journal of Politics and Society, 21(2-3), pp. 198-210.

Ajith Nivard Cabraal, (2008). The Present Global Financial Crisis and Sri Lankan, Economy. Colombo: Governor of the Central Bank of Sri Lanka.

Asuero, A. G, Sayago, A & Gonzdlez, AG, (2007). The Correlation Coefficient: An Overview. Critical Reviews in Analytical Chemistry, 36(1), pp. 41-59.

Castells, M, (2014). The Economic Crisis and American Society. New jersy: Priceston University Press.

Central Bank of Sri Lanka , (2022). Central Bank of Sri Lanka (Oniine] Available at: https://www.cbsl gov.Ik/en/economic-and-statistical-charts/gdp growth-chart, {Accessed 20 06 2022]

Creswell, j. W., & Poth, CN. (2017). Qualitative Inquiry and Research Design:Choosing Among Five Approaches, SAGE Publications.

Crotty, J, (2009). Structural causes of the global financial crisis: a critical assessment of the ‘new financial architecture. Cambridge journal of Economics, 33(4), p. 563-580.

Dahanayake, W., & Priyashantha, K. G. (2020). Undecided Careers among Agriculture Undergraduates: An Analysis of Determinants. Proceedings of international Conference in Management and Economics, 261-288.

Dilhani, V. L, & Priyashantha, K. G. (2021). Determinants of Intention to Use eGovernment Services in Sri Lanka. Proceedings of 12th tnternational Conference of Business and information, 305-318.

Goonetilieke, A E., & Priyashantha, K. G. (2019). The impact of Work Life Conflicts on Employees’ job Satisfaction in Hotel industry.

Gunatilaka, R., (2015). Rapid Assessment of the Impact of the Global Economic Crisis on Employment and industrial Relations in Sri Lanka, $i: Internationa Labour Organization.

Haresankar, Galappaththi, U. & Perera, R, (2018). Factors Affecting the Sustainability of SME Industries: A Case Study in the Southern Province of Sri Lanka. Peradeniya, Sri Lanka, 2018 International Conference on Production and Operations Management Society (POMS).

Kadirgamar, A, (2012). Legitimacy and Crisis in Sri Lanka Economic and Political Weekly, 47(9), pp. 25-29.

Kirman, A, (2010). The Economic Crisis is a Crisis for Economic Theory. CESifo Economic Studies, 56(4), p. 498-535.

Koralege, J. & Priyashantha KG (2019). Impact of Rewards on Individual Job Performance. International Conference on Management and EconomicsAt: Faculty of Management and Finance, University of Ruhuna, Matara Sri Lanka, 525-544.

Kotz, D. K, (2009). The Financial and Economic Crisis of 2008: A Systemic Crisis of Neohberal Capitalism. Review of Rad: cal Political Economics, 41{3), pp. 305-317.

Levy, B. (1993). ‘Obstacles to developing indigenous Small and Medium Enterprises: An Empirical Assessment’, Worid Bank Economic Review, Vol. 7 No.1, pp. 34 - 53.

M Castells, |. C G C, (2012). Aftermath: The cultures of the economic crisis. 1st ed. Oxford: Oxford University Press.

Mel, S. d, McKenzie, D. & Woodruff, C, (2013). The Demand for, and Consequences of, Formaiization among Informal Firms in Sri Lanka AMERICAN ECONOMIC JOURNAL: APPLIED ECONOMICS, 5(2).

Priyashantha, K G., & Vidyaratne, K. (2021). impact of institutional Factors on Employee Sausfaction of Management Assistants of University of Ruhuna. Wayamba journal of Management, 12, 470-494. https://doi.org/ 10.4038/wjm.v1 212.7549.

Ruwanpura, KN. & Wrigley, N., (2011). The costs of compliance? Views of Sri Lankan apparel manufacturers in times of global economic crisis. journal of Economic Geography, 11(6), p. 1031-1049.

Ruwanpura, KN. & Wrigley, N. 2011. The costs of compliance? Views of Sri Lankan apparel manufacturers in times of global economic crisis. journal of Economic Geography, 11(6), p. 1031-1049.

Ryazantsev, S, 201S. Labour Migration from Central Asia to Russia in the Context of the EconomicCrisis [Onine] Available at: Stiglitz, J. E, (2009). The Current Economic Crisis and Lessons for Economic Theory. Eastern Economic journal, Volume 35, p. 281-296.

Sultana, G, 2022. Economic Crisis in Sri Lanka:An Assessment (Online) Available at: https://policycommons.net/artifacts/2273308/economic-crisis-insri-lankaan- assessment/3033121/ [Accessed 18 0S 2022).

Taherdoost, H., (2018). Sampling Methods in Research Methodology; How to Choose a Sampling TechniqueforResearch. [Online Availableat: https://papers.ssrn.com/sol3/paperscfm7abstract_id=320503.

Wickremasinghe, S. 1. (2011). The status of SMEs in Sri Lanka and promotion of their innovation output, TECH Monitor, Policy Research Division, Colombo: National Science Foundation.

Ukenna, S, Ijeoma, N., Anionwu, C & Olise, M. C, 2010.

Uslaner, E. M., (2010). Trust and the Economic Crisis of 2006. Corporate Reputation Review, Volume 13, p. 110-123. https://eng globalaffairs.ru/articles/labour-migration-from-central-asia-torussia-in-the-context-of-the-economic-crisis/{Accessed 15 06 2022].

New initiative to help Sri Lankan SMEs grow. (n.d.). Print Edition - the Sunday Times, SriLanka. Retrieved October 25, 2022, from https: //www.sundayomes.Ik/220130/business-times/new-initiative-to-helpsti-lankan-smes-grow-470589.html